Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 251

வெள்ளிக்கிழமை 04 ஓகஸ்ட் 2023

ர் - வள்ளுவர் ஆண்டு 2054

**இலங்கை - இந்தியா கப்பல் சேவை மிக விரைவில்!**

விரிவு:- பக்.10

# வடமாகாணத்தில் வெப்பப் பேரிடர்!

- மூன்று நாள்களில் மழை வரலாம்
- இல்லாவிடின் நிலைமை கைமீறும்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 4

**வடக்கு மாகாணத்தில் தற்போது 'வெப்பப் பேரிடர்' நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் அடுத்த மூன்று நாள்களுக்குள் வெப்பச் சலன மழைக்கு சாத்தியம் இருக்கின்றது. மழை பொய்க்கும் பட்சத்தில் நிலைமை கைமீறும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.**

»11



பூநகரி - முக்கொம்பனில்

## கட்டுப்பட்டது காட்டுத் தீ!

### பூநகரி பிரதேசசபைக்கும் கரைச்சி தீயணைப்பு பிரிவுக்கும் மக்கள் பாராட்டு

கிளிநொச்சி, ஓக. 4

கிளிநொச்சி, முக்கொம்பன் காட்டுப்பகுதியில் மூண்ட பெரும் காட்டுத் தீ கடும் பிரயத்தனத்தின் மத்தியில் நேற்றிரவு கட்டுப்பாட்டுக்குள் »11

## மடுவுக்கு வருகிறார் ரணில்!

மன்னார், ஓக. 4

மடுப் பெருவிழாவில் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரம »11

## 393,094 குடும்பங்களுக்கு சமுர்த்தி

கொழும்பு, ஓக. 4

'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டத் துக்குத் தகுதி »09

## மீற்றர் இல்லாத ஓட்டோ 'அவுட்'

யாழ்., ஓக. 4

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில், மீற்றர் »11



## மல்லாவிக் குளத்தில் நேற்று பல்லாயிரம் மீன்கள் இறப்பு

முல்லைத்தீவு, ஓக. 4

முல்லைத்தீவு - மல்லாவிக் குளத்திலும் அதன் வாய்க்கால்களிலும் நேற்றையதினம் பல்லாயிரம் மீன்கள் இறந்து மிதந்துள்ளன.

இது தொடர்பில் விவசாயிகளாலும் மீனவர்களாலும் உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் »11

## வாகன மோசடி: மூவர் கைது!

### இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 4

மோட்டார் சைக்கிளின் இயந்திர அடிச்சட்டம் மற்றும் போலி ஆவணங்களைக் கொண்டு வாகன மோசடியில் ஈடுபட்ட மூவர் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் »11

## எரிவாயு விலை இன்று எகிறும்!

கொழும்பு, ஓக. 4

சமையல் எரிவாயுவின் புதிய விலை தொடர்பான அறிவித்தல் »11

தூக்கிட்ட நிலையில்

## பல்கலை மாணவி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணம் - கலட்டிப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட »11

பறாளாய் முருகன்கோவில் அரசமரம்

## வரலாற்றைத் திரித்து வர்த்தமானி வெளியீடு

### சட்ட நடவடிக்கைக்கு ஆலயத்தினர் தயார்

யாழ்ப்பாணம், ஓக. 4

சுழிபுரம் பறாளாய் முருகன் கோவிலில் உள்ள அரசமரம் சங்கமித்தை நட்டது என்றும் இதனால் அந்தப் பகுதி தொல்பொருள் »09

வவுனியாக் கொலை;

## சூத்திரதாரி கைது!

வவுனியா, ஓக. 4

வவுனியா - தோணிக்கல் பகுதியில் வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதில் இளம் குடும்பப்பெண்ணும் பின்னர் சிகிச்சை »11

## கிளாலியில் சூடு

ஒருவர் காயம்!

கிளிநொச்சி, ஓக. 4

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி கடற் »11



சிமெந்துத் தொழிற்சாலை

## வேண்டாம்!

### பொன்னாவெளி மக்கள் போராட்டம்!

கிளிநொச்சி, ஓக. 4

பூநகரி - பொன்னாவெளி பகுதியில் சிமெந்துத் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்தத் திட்டத்துக்கு எதிராக »11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தள்ளாடும் மருத்துவத்துறை; கட்டமைக்க ஜனாதிபதி முடிவு



- புதிய சட்டவரைவு தயாரிக்குக
- ரூ. 30 பில். மேலதிக நிதியொதுக்கீடு
- மருந்துக் கொள்வனவில் வெளிப்படை
- கலைத்துறை மாணவரை உள்ளீர்க்க ஏற்பாடு

கொழும்பு, ஓக. 4

**சுகாதார சேவைக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைந்து மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கும் வகையில் புதிய மருத்துவ சட்டவரைவை உடன் தயாரிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.**

சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பைப் பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போதே காலத்துக்கேற்ற மாற்றங்களை ஆராய்ந்து புதிய மருத்துவச் சட்டமொன்றைக் கொண்டு வருமாறு சுகாதார அமைச்சுக்குப் பணித்தார்.

மேலும் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு போதுமான அவசர மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 பில்லியன் ரூபா மேலதிக நிதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

அங்கீகரிக்கப்பட்ட நாடுகளின் மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளைக் கொள்வனவு செய்ய விரைவுபடுத்துங்கள்.

அத்தியாவசிய மருந்துகள் ஒழுங்காகவும் விரைவாகவும் கிடைப்பதை தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபை சட்டத்தில் தேவையான திருத்தங்களை செய்து உறுதிப்படுத்துங்கள்.

மருந்துவத்தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும் பொதுச் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கவும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து ஆராயப்பட்டன.

இதன்போது வெளிப்படையான மருந்துக் கொள்முதல் செயல் முறையைத் தயாரிப்பதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே. செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

மேலும் தாதியர் ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் யாப்பில் திருத்தம் செய்து கலைத்துறையில் கற்கத் தகுதியானவர்களை தாதியர் பணிக்கு இணைத்து பயிற்சியளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அனைத்துக் குடிமக்களுக்கும் வலுவான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் முன்மொழியப்பட்ட இந்த மறுசீரமைப்புகளை விரைவாகச் செயற்படுத்துமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ச-இ)

## சீரமைக்கப்படுகிறது மருத்துவத்துறை!

### சுகாதார அமைச்சர் தகவல்



கொழும்பு, ஓக.4

விஞ்ஞானபாடம் மாத்திரமன்றி அனைத்துப் பாடங்களையும் கற்ற மாணவர்களும் தாதியர் பணியில் நுழைவதற்கு வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். தனது ருவிற்றர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய நியாயமான மற்றும் திறந்த சந்தைக்கு இடமளிக்கும் வகையில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டம் நீக்கப்படவுள்ளது.

அதேவேளை மருத்துவ சபை சட்டமும் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு புதிய சட்டவரைவு தயாரிக்கப்படவுள்ளது.

மேலும் போதைப்பொருள் பரிசோதனைக்கான அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தை அமைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவை நாடியுள்ளோம் என்றும் குறிப்பிட்டார். (ச-ரி2)

## காலாவதி கண்ணீர்ப் புகைக்குண்டு பொலிஸார் மீது கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.4

இலங்கைப் பொலிஸார் காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்துவது பொலிஸ் திணைக்களம் தொடர்பான தேசிய கணக்காய்வு அறிக்கை மூலம் அம்பலமாகியுள்ளது. பொருள் பட்டியலுக்கு அமைய, பாவனைக்கு உதவாத 4 ஆயிரத்து 844 சி.எஸ். கண்ணீர்ப்புகை குண்டுகளும், 4 ஆயிரத்து 992 கண்ணீர்ப் புகைக் கிரனைட்ஸ்களும் இருக்க வேண்டும். ஆனால், பொலிஸ் களஞ்சியசாலையில் ஆயிரத்து 56 கண்ணீர்ப்புகை குண்டுகளே உள்ளன. அதிலும் 893 சி.எஸ். கண்ணீர்ப்புகை குண்டுகளும், 163 கண்ணீர்ப் புகைக் கிரனைட்ஸ்களும்மட்டுமே பொலிஸ் களஞ்சியசாலையில் உள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கண்ணீர்ப் புகைக் குண்டுகள் எவ்வாறு காணாமற் போயின என்பன தொடர்பான தகவல்கள் எவையும் இல்லை. வாழைத்தோட்டம் மற்றும் நாரஹேன்பிட்டி ஆகிய இரு பொலிஸ் நிலையங்களில் மொத்தமாக 871 கண்ணீர்ப்புகைக் குண்டுகள் காணப்படுகின்றன. இவைகள் 2004, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டவை.

"காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பொலிஸ் நிலையங்களில் உள்ளன. அவைகள் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன" எனவும் தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)

## ஹரின் மற்றும் மனுஷ மீண்டும் ஐ.தே.க.வில்

கொழும்பு, ஓக. 4

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் நீக்கியுள்ளது. அவர்கள் இருவரும் கட்சிச் செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஐ.தே.க.வின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே தடை நீக்கப்பட்டு, அவர்கள் செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஹரின் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்ததை அடுத்து, அவர்களின் கட்சி உறுப்புரிமை ஐக்கிய தேசியக் கட்சியால் நீக்கப்பட்டது. தற்போது அவர்கள் இருவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டதையடுத்து தடை நீக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட இவர்கள் இருவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. (ஏ-44)

## மன்னிப்புக் கோரிய உமாரா சிங்கவன்ச!



கொழும்பு, ஓக. 4

தேசியகீதத்தைத் திரிபுபடுத்திப் பாடினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாடகி உமாரா சிங்கவன்ச மன்னிப்புக் கோரியுள்ளார். அவர் தனது சமூக வலைத்தளப் பக்க பதிவிலேயே மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் ஆரம்பத்தின்போது தேசியகீதம் பாடும் விதத்தில் கவனம் செலுத்தினேன். இருப்பினும் நேர்ந்த தவறால், யார் மனதேனும் காயப்பட்டாலோ அல்லது புண்படுத்தப்பட்டிருந்தாலோ அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

தேசியகீதம் பாடும்போது நமோ நமோ மாதா என்று பாடவேண்டிய இடத்தில் அவர் நமோ நமோ மஹதா என்று பாடியிருந்தார். அது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஏ-இ)

### சிறுவன் துஷ்பிரயோகம்

## முன்னாள் சிப்பாய்க்கு ஏழு ஆண்டுகள் சிறை

சிறுவனைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய முன்னாள் சிப்பாய்க்கு ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி டி. எஸ். சூசைதாஸ் தண்டனைத் தீர்ப்பளித்துள்ளார்.

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய விளாங்குளம் எனப்படும் மகாதிவுல்வெவ பகுதியில் ஏழுவயதுச் சிறுவன் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

38 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான குற்றவாளி இராணுவத்தில் கடமையாற்றி வந்த நிலையில் விடுமுறை தினங்களுக்கு தனது வீட்டுக்கு வந்திருக்கும் சந்தர்ப்பங்களில் [illegible] யோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார். (ஏ-இ)

## நீர்க்கட்டணம் உயர்வு வர்த்தமானி வெளியீடு

நீர்க்கட்டணம் அதிகரிப்புச் செய்யப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 0 முதல் 5 வரையிலான அலகொன்று 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு மாதாந்தக் கட்டணமாக 300 ரூபா அறவிடப்படும். 6 முதல் 10 வரையிலான அலகொன்று 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்தக் கட்டணமாக 300 ரூபா அறவிடப்படவுள்ளது.

மருத்துவமனைகள், பாடசாலைகள், மதத்தலங்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், நலன்புரிக் கொடுப்பனவு பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நீர்க்கட்டண அதிகரிப்பு தாக்கம் செலுத்தாது என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மின்சாரக் கட்டணம் 66 சதவீதத்தால் அதிகரித்தமையே நீர்க் கட்டண அதிகரிப்புக்குக் காரணமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ச-ரி3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்காக யாழ்.பேரணி புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 4

**மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி - தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையான நடைபயணத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை பேரணி முன்னெடுக்கப்பட்டது.**



யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபவனி நகரப் பகுதியை சுற்றி மீண்டும் பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வாகனப் பேரணியாக வவுனியா நோக்கிப் புறப்பட்டுள்ளது.

பேரணியில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், முஸ்லிம் மக்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். (ச-ரி2-27-20)



## 20 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 4

கோப்பாய் மத்திப் பகுதியில் 20 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வீடொன்றை முற்றுகையிட்டு சோதனையிட்டபோதே இந்தக் கைது இடம்பெற்றது. 35 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-ரி-125)

## அலைபேசிகள் திருட்டு; மூவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஓக. 4

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல அலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அலைபேசித் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணையில் முன்னெடுத்த விசாரணையில் குறித்த சந்தேகநபர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் பல்லசுட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-ரி 27)

## விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுங்கள்!

*சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை*

யாழ்ப்பாணம், ஓக.4

உடவல நீர்த் தேக்கத்தின் நீரைத் திறந்து விடாததால் தெற்கு விவசாயிகளும், உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைக்காததால் வடக்கு விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள விவசாயிகளுக்கே நீரைத் திறந்துவிடாத அமைச்சர்கள், வடக்குக்கு மகாவலியைக் கொண்டு வருகின்றோம் என்று கூறி பல வலயங்களை உருவாக்குகின்றனர். சிங்கள மக்களைக் குடியேற்ற நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றனர். மகாவலி ஆறு எட்டியும் பார்க்காத வடக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் காணிகளைச் சுவீகரிப்பதென்பது சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவேண்டும் என்ற அரசாங்கத்தின் உண்மையான நிகழ்ச்சி நிரலே.

அடுத்த ஜனாதிபதி நான்தான் என்று கூக்குரல் இடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (எ-20)



## வனவளத்திணைக்கள அலுவலகம் முல்லை. குமுழமுனையில் திறப்பு

முல்லைத்தீவு, ஓக. 4

முல்லைத்தீவில் வனவளத்திணைக்களத்தின் குமுழமுனை பிரதேசத்துக்குரிய வட்டார அலுவலகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கொழும்புவனபாதுகாவலர்நாயகம் கலாநிதி கே.எம்.ஏ.பண்டார வைபவரீதியாக இந்த அலுவலகத்தை திறந்துவைத்தார். நிகழ்வில் கொழும்பு வனவள பாதுகாப்பு நாயகத்தின் அதிகாரிகள், முல்லைத்தீவு வனவள அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முள்ளியவளை பிரதேசத்தில் வனவளத்திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் காணப்படும் நிலையில் முல்லைத்தீவில் வனங்கள் சட்டவிரோதச் செயற்பாடுகளால் அழிக்கப்பட்டு வருவதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-19)




கண்ணைக்கோதிக் காக்கைப் பிள்ளையார் பற்றி வரலாற்றிலயும் சமயப் பாடத்திலயும் படிச்சிருப்பீங்கள். சுழிபுரம் பறாளாயில வயலுக்கு நடுவில பிள்ளையார் கோயிலும், முருகன் கோயிலும் அக்கம் பக்கமா இருக்குது. இந்தப் பிள்ளையார் கோயிலை வெள்ளைக்காரர் இடிக்க வரேக்க, பிள்ளையார் காக வடிவில வந்து அந்த வெள்ளைக்காரத் தளபதியின்ர கண்ணைக் கோதினதால, கோயிலை இடிக்காமல் அவங்கள் திரும்பிப் போட்டாங்கள். இப்பிடிப்பட்ட பிள்ளையாரும், பக்கத்தில இருக்கிற முருகனும்தான் அங்கத்தை சனத்தின்ர குலதெய்வங்கள். இந்தக் கோயில்கள் சோழர்காலத்துக்கு முந்தியே இஞ்ச இருக்கெண்டதும் ஒரு ஐதீகம். அப்பிடிப்பட்ட பறாளாய் முருகன், பிள்ளையார் கோயில்களையும் தங்கட கட்டுப்பாட்டுக்க கொண்டுவாறதுக்கு பிக்குகள் முடிவெடுத்திட்டினம்.


சங்கமித்தை ஜம்புகோளப்பட்டினத்தில வந்திறங்கி, பிறகுதானே தென்னிலங்கைப் பக்கம் போனவா. அவா வந்திறங்கின ஜம்புகோளப்பட்டினமும், பறாளாயும் கிட்டக் கிட்டத்தான். தூணைக் கண்டவுடன நாய் காலைத் தூக்கிற மாதிரி, உந்தச் சங்கமித்தையும் தான் போனவழியெல்லாம் வெள்ளரசமரக் கொப்புகளை நட்டுக் கொண்டு போனவாவாம். அவா கொண்டு வந்த வெள்ளரசமரம் தான், அநுராதபுரம் மகாபோதியில இருக்கு. அந்த வெள்ளரசமரத்தின்ர இன்னொரு கிளை பறாளாய் முருகன் கோயில்ல இருக்கெண்டு அரசாங்கம் பெப்ரவரி மாதமே வர்த்தமானி அறிவித்தல் விட்டிருக்கு. பொதுவா சைவக்கோயில்களில வெள்ளரசமரம் இருக்கிறது வழமை. "...ஆற்றங்கரை ஓரத்திலே அரசமர நிழலிலே வீற்றிருக்கும் பிள்ளையார்" எண்டு பாட்டுக்கூட இருக்கு. ஏதோ புத்தர்தான் வெள்ளரசைக் கண்டுபிடிச்சமாதிரி, எங்கயெல்லாம் வெள்ளரசு இருக்கோ அங்கையெல்லாம் விகாரை இருந்தது. சங்கமித்தை வந்தவா எண்டு ஏதோ ஒண்டை உருட்டி, அந்த இடத்தை ஆட்டையைப் போடுறதே பிக்குகளுக்கும் தொல்லியல் திணைக்களத்துக்கும் வாடிக்கையாப் போட்டுது.

பறாளாயில நிக்கிற அரசமரத்தை பிக்குகளுக்கு 'உது சங்கமித்தை கொண்டுவந்து நட்டது' எண்டு உருவேத்தினது அதேகோயில்ல இருக்கிற ஒரு ஐயர்தானாம். அவர் ஏற்கனவே முந்தி அந்தத் தரிசனம், இந்தத் தரிசனம் எண்டு தன்ரபாட்டில ஏதும் கனவு கண்டு நோட்டீஸெல்லாம் அடிச்சு விட்டவர். தன்ர 12ஆவது நோட்டீஸ் வரேக்க தமிழீழம் வந்திடும் எண்டெல்லாம் சொல்லித் திரிஞ்சவர். ஆனால் இப்ப அவர் நூறுக்கும் மேல நோட்டீஸ் அடிச்சும் ஒண்டும் நடக்கேலை. அதாலையோ என்னவோ சடாரெண்டு ஆள் நல்லிணக்கவாதியா மாறி, கோயில் சுவரெல்லாம் சந்திரிகாவின்ர படமெல்லாம் கீறி பெரிய விளையாட்டுக் காட்டினார். அதைவிட மாதகல் சம்பில்துறையில இருக்கிற பிக்குகள், இந்தக் கோயில்ல வந்து ஒவ்வொரு பௌர்ணமிக்கும் பூசை செய்து, பிரித் ஓதலாம் எண்டும் வழிகாட்டியிருக்கிறார். அப்பிடியே அவைக்கு இது சங்கமித்தையின்ர அரசமரம் எண்டும் போட்டுக்குடுக்க, அந்தப் பிக்குகளும் ஆமியுமாச் சேர்ந்து சத்தமே போடாமல், ஒரு ஆராய்ச்சியும் செய்யாமல் 'பறாளாயில இருக்கிறது சங்கமித்தை வைச்ச அரசமரம்தான்' எண்டு வர்த்தமானி விட்டிருக்கினம்.

பெப்ரவரியில விட்ட வர்த்தமானி பற்றி இப்பதான் எங்கட ஆக்களுக்கு தெரியிறதும் கடும் பகிடிதான்.

இனியென்ன, ஊர்க்காரர் எல்லாரும் பறாளாயைக் காப்பாத்த ஆர்ப்பாட்டம், பேரணி எண்டு இறங்குவினம். அரசாங்கமும் அதையெல்லாம் கணக்கில எடுக்காமல், அரசமரத்தையும் கோயில்களையும் தன்ர கட்டுப்பாட்டுக்க கொண்டு வரும். கொஞ்சநாளில இந்த முருகன், பிள்ளையார் கோயில்களை விடவும் பென்னம் பெரிசா ஒரு சங்கமித்தா விகாரை பறாளாயில எழும்பும்.


எண்டாலும், கண்ணைக்கோதி வெள்ளைக்காரரையே கலைச்ச பிள்ளையாரும், முருகனும் பிக்குகளையும், அரசமரத்தைக் காட்டிக் குடுத்தவையையும் சும்மா விட்டிடுவினமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரம் கந்தன் திருமஞ்சப் திருப்பவனி



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவப் பெருவிழாவின் பத்தாம் நாள் திருவிழாவான திருமஞ்சப்பவனி கடந்த திங்கட்கிழமை இரவு சிறப்புற இடம்பெற்றது.
(ச-ரி3-66)

## பொதுக்கூட்ட அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம், இல.15, சிறாம்பியடி லேனில் உள்ள தமிழ்ச்சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்ச்சங்கத் தின் செயலாளர் கு.றஜீபன் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## 'யாழிசை கவித்தடாகம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 4

சுன்னாகத்தில் 'யாழிசைக் கவித் தடாகம்' நூல் வெளியீடும் இலக்கியச் சந்திப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் யாழிசைக் கவித் தடாக அமைப்பின் நிறுவுநர் கவிஞர் உடுவிலூர் கலா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், வலிகாமம் தெற்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் இ. மயூரநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கனடாவைச் சேர்ந்த வள்ளுவன் இணைப்பள்ளியின் நடத்துநர்களான ஜெ.சோமசுந்தரம், திருமதி.ஜோதி ஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
(ச-ரி-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பண வரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். பிறருடன் பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆத ரவு தருவார். செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்கு சிறிய அளவில் கடன் வாங்க நேரிடும்.

## நல்லூர்க் கலைக்கூடலில் கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 4

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பால் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

சைவம், தமிழ், பண்பாடு, கலாசார விழுமியங்கள் தொடர்பில் யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் காலை 9 மணிக்கு இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டியில், கனிஷ்ட பிரிவு மாணவர்கள் 100 சொற்களிலும் மத்திய பிரிவு மாணவர்களுக்கு 150 சொற்களிலும் மேற்பிரிவு மாணவர்கள் 250 சொற்களுக்கும் குறையாமல் கட்டுரையை எழுத வேண்டும்.

மதிப்பீட்டுக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இதற்கான பரிசளிப்பு நிகழ்வு நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழா எதிர்வரும் செப்ரெம்பர்15ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ச-ரி)

உயர்தர உயிரியல் தொழில்நுட்ப

## செயன்முறைப் பரீட்சை நாளை முதல் ஆரம்பம்!

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2022ஆம் ஆண்டுக்கான உயிரியல் தொழில்நுட்பச் செயன்முறைப் பரீட்சைகள் நாளை 5ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 7ஆம் திகதிவரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

செயன்முறைப் பரீட்சைகள் 77 பரீட்சை மையங்களில் நடத்தப்படவுள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.

இதன்போது உயர்தரப் பரீட்சை எழுதுப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் செயன்முறைப் பரீட்சையில் பங்கேற்க முடியாது. பாடசாலை விண்ணப்பதாரிகளின் சேர்க்கைப் படிவம் ஏற்கனவே அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தனியார் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. www.doenets.lk இணையத் தளத்துக்குச் சென்று விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் மேலதிக தகவல்களுக்கு 0112784208, 0112784537, 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ச-ரி3)

## கோடா பறிமுதல்; இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 4

கோப்பாய் பகுதியில் 15லீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அதேபகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
(ச-ரி-125)

## மண்டைதீவு அந்தோனியார் நவநாள் கூட்டுத் திருப்பலி

யாழ்ப்பாணம், ஓக. 4



வேலணை, மண்டைதீவு புனிதபேதுருவானவர் அந்தோனியார் ஆலய வருடாந்த நவநாள் கூட்டுத் திருப்பலி நேற்றுமுன்தினம் புதன்கிழமை அடியவர்கள் சூழ சிறப்பாக இடம் பெற்றது.

கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நவநாள் நற்கருணை ஆராதனையுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அதிதியாகப் பங்கேற்று திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.
(ச-ரி3-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## '13' எனும் மாயமான்

'13' ஆவது திருத்தச்சட்டம் மீண்டும் பூதாகரமாக்கப்பட்டுள்ளது. தமிழர் தரப்பு '13'ஐ வைத்துப் பல்வேறு விவாதங்கள் நடத்தி வருகின்றது. '13'ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஏதோ பல விடயங்கள் நடந்தேறும் என்ற தொனியிலும் கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. '13'ஆவது திருத்தத்துக்கு பொலிஸ் அதிகாரமும், காணி அதிகாரமும் கிடைத்துவிட்டால் எல்லாவற்றையும் 'வெட்டிவிழுத்திவிடுவோம்' என்ற அளவுக்கு தமிழ்ப் பரப்பில் கதையாடல்கள் உலாவுகின்றன. 1987ஆம் ஆண்டு '13' ஆம் திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றபோது இருந்த அதிகாரங்கள் மீளக் கிடைத்தால் இப்போதுள்ள நிலைமைகளைச் சமாளிக்கலாம் என்றளவுக்கு வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துகளைத் தெரிவித்துவருகின்றார். ஆனால் அது உண்மையா என்பதை அவர் கூட சீர்தூக்கிப் பார்த்தாரா என்பது தெரியவில்லை.

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு இணைந்த வடக்கு – கிழக்கின் முதலாவது முதலமைச்சராக முழு அதிகாரங்களுடன் ஆட்சியில் அமர்ந்த வரதராஜப்பெருமாள் நேர்காணல் ஒன்றில் தெரிவித்த விடயங்கள் கவனத்தில்கொள்ளப்படவேண்டும். ''13ஆவது திருத்தச் சட்டம் ஏறத்தாழ இந்தியாவின் அரசமைப்பை ஒத்ததாக இருக்கும். இந்தியாவைப்போல கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று பார்ப்பவர்கள் யோசிப்பார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. உதாரணமாக காணி அதிகாரத்தை எடுத்துக்கொண்டால் அது 'பின்னிணைப்புக்கு உட்பட்டது' என்று கூறப்பட்டிருக்கும். பின்னிணைப்பை எடுத்துப்பார்த்தால் முன்னிணைப்பில் கூறப்பட்ட விடயங்கள் தடுக்கப்பட்டிருக்கும்'' எனத் தெரிவித்திருந்தார். வெளித்தோற்றத்துக்கு '13'இல் இருப்பது போலச் சொல்லப்பட்டிருந்தாலும் நடைமுறைப்பிரயோகத்தில் அவை எவையும் இல்லை என்பதை அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்த உண்மைகள் எல்லாவற்றையும் மறைத்து மீண்டும் '13'ஆவது திருத்தமே உயர்ந்தபட்ச அதிகாரப் பரவலாக்கம் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனைப்புக்காட்டப்படுகின்றது. 1987ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இதுவரையில் பிடுங்கப்பட்டிருக்கின்றன என்றால் இப்போது '13'இல் வழங்கப்படும் அதிகாரங்கள் நாளையே பறிக்கப்படாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லாத நிலையில், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழர் தரப்பில் சிலர் தலைகீழாக நடப்பதுதான் மிக மோசமானது. அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்கின்ற தரப்பாக இல்லாமல் தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டுக் கொண்டு இருப்பதுதான் தமிழ் மக்கள் இன்றுவரையில் முன்னேற்றம் எதனையும் காணாமல் இருப்பதற்கு காரணமாகின்றது.

'13'ஆவது திருத்தத்தை தமிழர்களின் தலையில் எப்படியாவது கட்டிவிடவேண்டும் என்பதற்காக பலர் களமிறக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் புதியதொரு வாதத்தை முன்வைக்கின்றார்கள். சிங்களக் கடும்போக்காளர்கள் '13'ஆவது திருத்தத்தை – மாகாணசபைமுறைமையை இல்லாதொழிக்கப் போராடுகின்றார்கள். தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்பதால்தான் சிங்களக் கடும்போக்காளர்கள் எதிர்க்கின்றார்கள். அவர்கள் எதிர்ப்பதால் தமிழ்த் தரப்புகள் ஆதரிக்கவேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. அது அபத்தமானது. சிங்களக் கடும்போக்காளர்கள் எதிர்ப்பதால் மாத்திரம் அவை தமிழர்களுக்கு ஏற்றதொரு தீர்வாகிவிடாது. இந்த வாதம் மிக மோசமானது; ஆபத்தானது. இந்த வாதத்தை முன்வைப்பவர்களுக்கே, சிங்களக் கடும்போக்காளர்கள் அதனை ஏன் எதிர்க்கின்றனர் என்ற அடிப்படை நன்கு தெரியும். இருந்தாலும் அதை மூடிமறைத்து தமிழர் தலையில் '13'ஐத் திணிக்க – தங்கள் எஜமானர்களுக்கு விசுவாசத்தைக் காண்பிக்க அபத்தமான வாதத்தை முன்வைக்கின்றனர்.

36 ஆண்டுகளாக முன்னேற்றம் இல்லாது 13ஆவது திருத்தம் தேய்ந்து செல்கின்றது. இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்ட எந்தவொரு அதிகாரப் பகிர்வும் இப்படித்தான் இருக்கும். தம்மைச் சான்றோராக அடையாளப்படுத்துபவர்கள் இதைத் தெரிந்தும் தமிழ் மக்கள் தலையில் '13' என்னும் மாயமானை கட்டிவிடத் துடிப்பதை தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் ஒரு பூவில் விருப்பப்பட்டால் அதைப் பறித்து விடுவீர்கள். ஆனால் நீங்கள் ஒரு பூவில் அன்பு வைத்தால் தினமும் அதற்குத் தண்ணீர் ஊற்றுவீர்கள்" – கௌதம புத்தர்




# மாகாண பொலிஸ் அதிகாரம்; ஒருபோதும் வாய்ப்பே இல்லை

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 4**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரங்களை ஒவ்வொரு மாகாணங்களுக்கும் பகிர்ந்தால் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படும். இந்த விடயத்தில் தெற்கு மக்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதே எமது எதிர்பார்ப்பு என்று வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொலிஸ் துறை அரசியல் மயமாகியுள்ளது என்று தற்போதே மக்கள் கூறுகின்றனர். பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான அமைச்சர் ஒருவரும், ஒரு நிர்வாகத்தின் கீழும் பொலிஸ் துறை இருக்கும்போதே நிலைமை இது வென்றால், ஒன்பது பொலிஸ் பிரிவுகள் உருவாகி 9 முதலமைச்சர்களின் கீழ் பொலிஸ் நிர்வகிக்கப்படும்போது என்ன நடக்கும் என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கு என்னவாகப் போகின்றது என்பதைச் சிந்திக்க வேண்டும். '13' ஆவது அரசமைப்பை பொறுத்தவரையில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் - என்றார். (எ-இ)

# அரசின் முகாமை ஒழுங்கில்லை தலையெடுக்கிறது புது மாபியா

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 4

சரியான முன்னாயத்தக் கணிப்பீடுகள் எதுவுமின்றி - புரிதலின்றி அரசாங்கம் முன்னெடுக்கும் தன்னிச்சையான செயற்பாடுகளால் நாட்டு மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு புதிய மாபியாவொன்று தலையெடுக்கவுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் நிலவும் வரட்சியான கால நிலையால் விவசாயிகள் அந்தரிக்கின்றனர். முறையான நீர் வழங்கல் முகாமைத்துவம் இன்மையால் விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கமுடியாதுள்ளது. விவசாயத் தேவைக்கு நீரை வழங்கினால் மின்னுற்பத்தியில் வீழ்ச்சியேற்படும் - வீழ்ச்சியைச் சமாளிக்க மின்துண்டிப்பு இடம்பெறும் எனக் கூறப்படுகிறது.

மின் உற்பத்தியில் சிக்கல் ஏற்படுமாயின் எரிபொருளைப் பயன்படுத்தி மின் தேவையைப் பூர்த்திசெய்யும் நிறுவனங்கள் பல தனியார் துறையை நாடவேண்டிய நிலையேற்படும். அதில் பணச்சுரண்டல் இடம் பெறப்போகிறது.


மருந்துகளை இறக்குமதி செய்யும்போது ஊழல் திட்டம் செயற்படுத்தப்பட்டமையாலேயே மருத்துவத்துறை வீழ்ச்சியுற்றுள்ளது. இதுவே மின்சார நெருக்கடிக்கு வழிவகுக்கிறது - என்றார். (ச-இ)

நாளை 05.08.2023 சனிக்கிழமை ஆடி 20

சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.33

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் இலங்கைக்கு ஆபத்தானவையே



**கொழும்பு, ஓக. 4**

**தெற்காசியாவில் செல்வாக்கையும் இருப்பையும் உயர்த்துவதற்கான மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே இலங்கையுடன் இந்தியா அண்மையில் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களை நோக்கவேண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ள, இலங்கையின் சுதந்திர அரசியல் மற்றும் எரிசக்தி ஆய்வாளர் அருண குலதுங்க, சீனாவால் நடத்தப்படும் மூன்று துறைமுகங்களான பங்களாதேஷிலுள்ள சிட்டகொங், இலங்கையின் அம்பாந்தோட்டை மற்றும் பாகிஸ்தானில் உள்ள குவாடர் ஆகியன இந்தியாவைச் சூழ்ந்துள்ள மரணத்தின் முக்கோணமாகும். இது இந்தியாவின் கழுத்தை நெரிப்பது போன்றது. இதுவே கொழும்புடன் உறவுகளை ஆழப்படுத்துவதற்கான டில்லியின் நகர்வுக்குக் காரணமாகும். அத்துடன் உலகின் மிகப்பெரிய இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வலியுறுத்துவதும் இதன் பொருட்டேயாகும்.

அரசியல் மற்றும் வணிக உயரடுக்கின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒப்பந்தங்கள் உள்ளூர் சமூகங்களின் தேவைகளை மோசமாகப் பாதிக்கலாம் - என்றார்.

இந்த நிலையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் அரசியல்விஞ்ஞான ஆய்வாளர் ரஜ்னி கமகே, நடைமுறையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அதிகார சமநிலையின்மை தொடர்பில் முன்முயற்சி களின்போது கொழும்பு பேச்சுவார்த்தையாளர்களுக்கு வெளிப்படைத்தன்மை அவசியம். ஒருதலைபட்சமான ஒப்பந்தங்களைத் தள்ளுவதற்கு 'நெருக்கடி' என்ற மொழியைப் பயன்படுத்தலாம் - என்றார். (அ-ஓ-இ)

# பெரமுனவின் வேட்பாளராக பஸில் களமிறங்க வாய்ப்பு


கொழும்பு, ஓக. 4

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்கும் நிலைப்பாடு எமக்குக் கிடையாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராகக் களமிறக்குவோம் என்று ஆளும்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு கட்சி என்ற ரீதியிலும் நாடாளுமன்றத்தினூடாகவும் ஒத்துழைப்பு வழங்குகிறோம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைக்க எவ்வித தீர்மானங்களும் இதுவரை எட்டப்படவில்லை.

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராகக் களமிறக்குவோம். அந்தவகையில் பஸில் ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படலாம் - என்றார். (ச-இ)



# தன் திட்டங்களாலேயே வீழ்ந்தார் கோத்தாபய!

## பெரமுனவின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4

கோத்தாபய ராஜபக்சவை நாங்கள் தனிமைப்படுத்தவில்லை. அவர் தன்னுடைய தவறான திட்டங் களால்தான் வீழ்ச்சியடைந்தார் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியப் பாதுகாப்பு, தேசியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 69 லட்சம் மக்கள் கோத்தாபயவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தார்கள். நெருக்கடியான சூழ்நிலையில் அவர் 69 லட்சம் மக்களானையைப் பாதுகாக்கவில்லை. பொதுஜன பெரமுன மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, 69 லட்சம் மக்களாணை என்பன பலவீனமடையக்கூடாது என்பதற்காகவே அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டில் எமது அமைச்சரவை உறுப்பினர்கள் முன்னிலை வகித்தார்கள். எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு, மின்விநியோகத் துண்டிப்பு ஆகிய காரணிகளால் நாட்டில் நெருக்கடி ஏற்பட்டது. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக ராஜபக்சக்களிடம் இருந்தும் பெரமுனவிடம் இருந்தும் தனித்துச் செயற்படுவதாகக் காண்பித்துக் கொண்டார். இதுவே அவருடைய வீழ்ச்சிக்குக் காரணம் - என்றார். (ம)

# நில அளவை அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 4

அரச நில அளவை அதிகாரிகள் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவதில் உள்ள தாமதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர். பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக நில அளவைச் சங்கத்தின் தலைவர் துமிந்த உதுகொட தெரிவித்தார். (ச-ரி3)



# தேசியகீதத்தைத் தமிழில் இசைப்பது பெரும் தவறே

## காமினி லொக்குகே தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4

தேசியகீதத்தைத் திரிபுபடுத்திப் பாடுவது தண்டனைக்குரிய தவறாகும். தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் இசைப்பதும் தவறு என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும் அதிகாரம் எனக்கு இல்லை. நாடாளுமன்றமே அதைத் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டில் தெளிவாகக் குறிப்பிட்டார். நாட்டில் தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த மக்களுக்கும் பிரச்சினை உள்ளது. ஒரு தரப்பினரது பிரச்சினைக்கு அரசமைப்பு ஊடாக மாத்திரம் எவ்வாறு தீர்வு காண்பது?. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புக் காணப்படும் பின்னணியில் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அந்தப் பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தினார். அந்த உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாதுகாத்துக் கொள்ளவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதைக் காட்டிலும் புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்தவேண்டும். 69 லட்சம் மக்களின் கோரிக்கை புதிய அரசமைப்பை மையப்படுத்தியதாக உள்ளது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் 13ஆவது திருத்தம் தேவையற்றதாக்கப்படும். தேசியகீதத்தை ஒவ்வொருவரின் விருப்பத்துக்கு ஏற்ப திரிபுபடுத்திப் பாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழ் மொழியில் தேசியகீதம் இசைப்பதும் தவறாகும். நான் அதற்கு நேரடியாகவே எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளேன் - என்றார். (ம)



# கத்தியால் குத்தி மனைவி கொலை

கொழும்பு, ஓக. 4

கொழும்பு மட்டக்குளியில் மனைவியை கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளார் கணவன்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மனைவியை கணவன் கொலை செய்துள்ளாரென முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான கணவன் தப்பியோடிய நிலையில் அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளி . பஸ் நிலையக் கழிப்பறையில்

# முறையற்ற பராமரிப்பு

### மக்கள் அசௌகரியம்

கிளிநொச்சி, ஓக. 4

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திலுள்ள மலசலகூடம் மற்றும் குளியலறையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் உரிய முறையில் வெளியேற்றம் செய்யப்படாமையால் அசௌகரியங்களைச் சந்திப்பதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உரிய பராமரிப்பின்மையால் சுகாதாரமற்று அவை காணப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில்,

கடந்த மார்ச் மாதம் கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்துக்குப் புதிதாக மலசலகூடம், குளியலறை என்பன மக்களின் நலன்கருதி பல வசதிகளுடன் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

ஐந்து மாதங்களேயான நிலையில் உரிய பராமரிப்பின்றி முகஞ்சுளிக்குமளவுக்கு அவை மாறியுள்ளன.

அவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீர், பயணிகள் பயன்படுத்தும் இடங்களுக்குள் வெளியேறுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

மக்களின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இன்மை ஆகியவற்றால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்டோர் கவனம்செலுத்தி சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்க்க முன்வரவேண்டும் - என்றனர். (ச-ரி2-113)

# சடலத்தை மீட்கச் சென்ற சிப்பாய் மாரடைப்பில் சாவு!



கொழும்பு, ஓக. 4

மலையுச்சியில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணொருவரின் சடலத்தை மீட்கச் சென்ற இராணுவச் சிப்பாயொருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. (ச-ரி2)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லையா தவனேஸ்வரன்

(உரிமையாளர் - தபேசன் விவசாய மாளிகை - கோண்டாவில்)



மண்ணில் 10.04.1955 விண்ணில் 20.07.2019

திதி:- திருதியை (04.08.2023)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

குடும்பத்தினர்.
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(CS/51510)AH-1


# மாடுகள் களவாடல் சந்தேகநபர் கைது!

வட்டுக்கோட்டைப் பகுதியில் மாடுகள் மூன்றைக் களவாடிய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நவாலி மயானத்துக்கு அருகில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

களவாடப்பட்டதாகக் கூறப்படும் மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைதாகியுள்ளார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-27)

# 1 மில்லி ஹெரோய்ன் தண்டம் ரூ. 10,000!

யாழ்ப்பாணம், ஓக. 4

வட்டுக்கோட்டை பிரிவுக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதான இளைஞருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று தீர்ப்பிட்டுள்ளது.

1மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் அண்மையில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

குற்றத்தை சந்தேகநபர் ஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கடுமையான எச்சரிப்புடன் அவர் விடுவிக்கப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி-125)

# கஞ்சாவுடன் நடமாடிய இருவருக்கு அபராதம்!

யாழ்ப்பாணம், ஓக. 4

வட்டுக்கோட்டையில் கஞ்சாவை உடைமையில் வைத்து நடமாடிய இருவருக்கு நீதிமன்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

வட்டுக்கோட்டை காட்டுப்புலம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்படுத்தினர்.

சந்தேகநபர்களால் குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூ ா தண்டம் விதித்து கடுமையான எச்சரிப்புடன் இருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-125)


## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG)- 2023 கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்ளிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்...

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தொலைபேசி இல: -021- 2058867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.08.04 ஆம் திகதியில் இருந்து 2023.08.18 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** அவர்களிடமிருந்து 2023.08.04 ஆம் திகதியிலிருந்து 2023.08.18 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.08.19 ஆம் திகதி பி.ப 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப் பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.08.11 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/PSDG /2023/01 | உரும்பிராய் உப அலுவலக நூலகம் திருத்தம் | 1.30 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 15,000.00 | 2023.11.04 |

**தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு, பிரதேச சபை புத்தூர்.**
2023.08.04

(எ) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையிலான யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். (ம-26)

## இளைஞனின் உயிரை குடித்தது ஹெரோய்ன்

யாழ்ப்பாணம், ஒக. 4 உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னை நுகர்ந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணத்தில் நேற்று உயிரிழந்துள்ளார். குருநாகலைச் சேர்ந்த 27 வயதுடைய முஸ்லிம் இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இந்த இளைஞர் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று மின்சார உபகரணங்களை விற்று வந்துள்ளார். அவர் கல்வியங்காட்டில் வியாபாரத்தில் ஈடுபட்ட வேளையில் நேற்று மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னின் அளவுக்கதிக நுகர்வே இறப்புக்குக் காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)


### வேலைவாய்ப்பு

புத்தக விற்பனையில் அனுபவம் வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் உடனடியாக வேலைக்குத் தேவை.

077 494 9683
077 077 6469

S/25771)AH-1



### பொது அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (15.08.2023) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல்.

**1. தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல்.**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 11.08.2023ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக தெல்லிப்பளை உபஅலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 11.08.2023 ஆம் திகதியன்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:-**

- சித்திபெற்ற கேள்வித்தாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்துக்கு பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகள் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ளமுடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.
- சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றல் வேண்டும்.

**2. பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்.**

பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் 11.08.2023 தொடக்கம் 14.08.2023 வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூ.1500.00 கட்டணம் செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக்கான சிவாச்சாரியார்களுக்குரிய அடையாள அட்டை அல்லது உறுதிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிப்பது கட்டாயமானது. மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**0212244180** AH-1 **04.08.2023**



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்

### மகோற்சவ கால கடைகள் ஏலம்

**எதிர்வரும் 06.08.2023 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சங்கப் பணிமனையில்** தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினால் **மகோற்சவ கால கடைகள் ஏலம் நடைபெறும்.** அன்றைய தினம் ஏலத் தொகையைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

**- இணைச் செயலாளர் -** (CS/51508) AH-1



### அருள்மிகு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்
பருத்தித்துறை வீதி - வரணி இயற்றாலை - வரணி
பதிவு இல: HA / 5 / JA / 1180

## கேள்வி அறிவித்தல்

**இராஜ கோபுர திருப்பணிக்கான பின்வரும் வேலைகளுக்கான கூலித் தொகைக்குரிய கேள்வி கோரப்படுகின்றது**

- ✓ இராஜ கோபுர திருக்கதவு செய்தல்
- ✓ இராஜ கோபுர மிகுதி கருங்கல் வேலை
- ✓ இராஜ கோபுர வர்ணப் பூச்சு வேலை

மேற்படி இராஜ கோபுர திருப்பணி வேலைகளுக்கான கேள்வி கோரல் படிவம் மற்றும் வேலை விவரக் குறிப்பு என்பவற்றை எமது ஆலய முன்றலில் அமைந்துள்ள கருமபீடத்தில் 04.08.2023 தொடக்கம் 13.08.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரையும் ரூபா 2000/- மட்டும் மீளளிக்கப்படாத கட்டுப்பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். (பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைக்கவும்)

கேள்விப் பத்திரத்தினைப் பூரணமாகப் பூர்த்தி செய்து 16.08.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கருமபீடத்துக்கு ஒப்பந்தகாரரோ அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ நேரில் வந்து சமர்ப்பித்தல் வேண்டும். அன்றைய தினமே கேள்வி திறக்கப்பட்டு கேள்வித் தொகை அறிவிக்கப்படும். நேர்முகத் தேர்வு விபரமும் தெரியப்படுத்தப்படும்.

**குறிப்பு :-** மேற்குறித்த வேலை தொடர்பான துறைசார் அனுபவமும், வேலையின் உறுதிப்பாடும் தொடர்பான முக்கிய கவனம் செலுத்தப்படுவதுடன் கேள்வித் தொகைக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட மாட்டாது.

**மேலதிக விபரங்களுக்கு ஆலய நிர்வாக சபைப் பொருளாளர் க.கோடீஸ்வரனைத் தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி இலக்கம் - 076 308 1048**

**- ஆலய பரிபாலன சபை**

(CR/40350)AH-1



### சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையம்
### மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையமானது வட மாகாணத்தில் மனித உரிமைகள் கல்வியில் தனித்துவமானதும் முன்னோடியுமானதுமான நிறுவனமாகும். சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் மனித உரிமைகளுக்கெதிராக குரல் கொடுக்கவும் வினைத்திறனாக செயலாற்றவும் கூடிய மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்கும் நோக்கில் கடந்த ஏழு வருடங்களாக இந்நிறுவனம் **மனித உரிமை தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியினை** வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இக்கற்கை நெறிக்காக புதிய அணி மாணவர்களை தற்போது இணைத்துக் கொள்ளவிருப்பதால் குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

- **வகுப்பு நடைபெறும் காலம்** :- **வாராந்தம் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம்.**
- **கற்கை நெறிக்கான காலம்** :- **ஆறு மாதங்கள்.**
- **கட்டணம்** :- **இலவசம்.**

**விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- அல்லது மனித உரிமைகள் மற்றும் சமூக செயற்பாடுகளில் மேற்குறித்த தகைமைகளுக்கு இணையான அனுபவம் அல்லது இதர தகைமைகள்

**விண்ணப்பிக்கும் முறை**

சுயவிபரக் கோவையை தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
**விண்ணப்ப முடிவு திகதி 18.08.2023**

**மேலதிக தொடர்புகளுக்கு**

தொ.பே.இல : 021 224 1494
மின்னஞ்சல் : lhrchumanrightsunit@gmail.com
முகவரி : No.64 Temple Road, Jaffna.

(ca.51509) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 393,094...

பெறாத, 3 இலட்சத்து 93 ஆயிரத்து 094 குடும்பங்களுக்குத் தொடர்ந்தும் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஸ்வெசும சமூக நலன்புரித்திட்டத்தில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு அதில் தற்போது 17 இலட்சத்து 92 ஆயிரத்து 265 விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பெயர்ப்பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் 10 இலட்சத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகளும் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஆட்சேபணைகளும் கிடைத்துள்ளன. தற்போது அவை தொடர்பான பரிசீலனைகள் இடம்பெற்று வருவதுடன், உரிய மேன்முறையீடுகளையும், ஆட்சேபணைகளையும் மறுபரிசீலனை செய்த பின்னர், உரிய இலக்கை அடைய முடியும். தற்போது சமுர்த்தி உதவித்தொகை பெறும் சுமார் 12 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி உதவிகளுக்காக விண்ணப்பித்துள்ளன. இதில் 8 இலட்சத்து 87 ஆயிரத்து 653 குடும்பங்கள் இந்தத் திட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய, நிவாரணம் பெற குறித்த தகுதிகளைப் பூர்த்தி செய்யாத 3 இலட்சத்து 93 ஆயிரத்து 094 குடும்பங்களின் சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும். மேன்முறையீடு தொடர்பான மறுபரிசீலனைகள் முடியும்வரை இது முன்னெடுக்கப்படும்.

தற்போது, முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்பட்டதுபோல் வழங்கப்படும். அதன்படி, முதியோர் உதவித் தொகை தபால் நிலையங்கள் மூலமாகவும், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி உதவித் தொகை பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், தற்போது வழிபாட்டுத் தலங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் அங்கவீனர் நிலையங்களில் உள்ள 11 ஆயிரத்து 660 பேருக்கு அவர்கள் பெற்றுவந்த சமூக நலன்புரிக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு இந்த அஸ்வெசும வேலைத்திட்டத்தின் ஊடாக எவரும் கைவிடப்படாத வகையிலேயே இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. தற்போது வழங்கப்பட்டுள்ள வங்கிக்கணக்குகள் தொடர்பில் உறுதிப்படுத்தல் பணிகள் நிறைவடைந்ததுடன் அஸ்வெசும கொடுப்பனவுகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

அஸ்வெசும சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபணைகள் தற்போது பிரதேச செயலர்களின் தலைமையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணியை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும என்பது சமுர்த்தி வேலைத்திட்டத்தையோ அல்லது சமுர்த்தி வங்கிகளையோ இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் அல்ல என்றும், சமுர்த்தி வங்கிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், எதிர்காலத்தில் மத்திய வங்கியின் ஊடாக ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டத்தை தயாரிக்க சமுர்த்தித் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது - என்றார். (அ-ம-26)

### வரலாற்றைத்...

அடையாளம் என்றும் தெரிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள நிலையில், வரலாற்றைத் திரிபுபடுத்தியே வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினரும் அந்தப் பகுதி பொதுமக்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுழிபுரம் பறாளாய் முருகன் கோவிலில் தொடர்பாக வர்த்தமானி பிரசுரமானதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்டோரும்சட்டத்தரணிகளும்பொது மக்களும் ஆலய வளாகத்தில் நேற்று ஒன்றுகூடி இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இதன்போதே 1798ஆம் ஆண்டு ஆலயம் அமைக்கப்பட்டபோது அரச மரம் இருக்கவில்லை என்று பொது மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் சுட்டிக் காட்டியுள்ளனர். இதையடுத்து இந்த வர்த்தமானி தொடர்பில் அடுத்தகட்ட சட்டநடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## தொடர்ந்து 15 ஆவது ஆண்டாக

# இலங்கையின் முதற்தர வங்கி வணிக நாமமாக தெரிவுசெய்யப்பட்டது இலங்கை வங்கி!



இலங்கையின் முதற்தர வங்கி நிறுவனமான இலங்கை வங்கி வரையறுக்கப்பட்ட 'மீடியா சேவிசஸ்' தனியார் நிறுவனத்துடன் 'பிராண்ட் ஃபைனான்ஸ் லங்கா' நிறுவனம்

இணைந்து வெளியிட்ட "Brand Annual Services 2023" எனும் இதழில் "AAA" என்ற வணிக நாம மதிப்பீட்டைப் பெற்று தொடர்ந்து 15 ஆவது ஆண்டாகவும் இலங்கையின் முதற்தர வங்கியியல் வணிக நாமம் என்ற கௌரவத்தைப் பெற்றுள்ளது. நாட்டின் வங்கித் துறையில் முன்னோடியாக 84 வருடங்களை நிறைவு செய்யும் இலங்கை வங்கிக்குக் கிடைத்துள்ள இக்கௌரவமானது வங்கி 1939ஆம் ஆண்டு நாட்டு மக்களின் பொருளாதார விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திற்கு இதுகாலும் உண்மையாக இருப்பதை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது. பல நாடுகளில் உலகளாவிய பிரசன்னத்தைக் கொண்ட ஒரு சுயாதீன வர்த்தக நாம ஆலோசனை நிறுவனமான Brand Fianance Lanka உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான முறையைப் பின்பற்றி பதினைந்து வருடங்களாக இலங்கை வர்த்தக நாமங்கள் பற்றிய வர்த்தக நாமப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த வங்கியின் பொது முகாமையாளர் திரு. ரசல் பொன்சேகா, "எம் நாட்டு மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அவர்களின் நம்பகமான நிதிப் பங்காளராக இரத்தமும் சதையுமாகக் கலந்துவிட்ட எமது பிணைப்பே நாட்டின் முதற்தர வங்கி என்ற எமது வெற்றிக்குக் காலாகும். இலங்கை வங்கியானது அதன் மாறா விழுமியங்களுடன் தன் நற்பெயரைப் பாதுகாத்து வருவதோடு தன் அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களினதும் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவையை வழங்குகிறது. இவ்வுயரிய நோக்கம் அதன் அனைத்து வகையான செயற்பாடுகளிலும் தொடர்பாடல்களிலும் வெளிப்படுவதோடு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையும் காணலாம்" - என்றார்.

வங்கித் துறையின் ஒவ்வொரு புதுமைகளிலும் முன்னோடியாக விளங்கும் இலங்கை வங்கி, 4 ட்ரில்லியன் ரூபாய் சொத்துத் தளம், 2000இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் சேவை மைய வலையமைப்பு, ஆகப் பெரிய ATM வலையமைப்பு, ஆகக் கூடிய வெளிநாட்டுப் பண அனுப்பல்கள் என மிகப்பெரிய வங்கித்துறை ஐந்தொகையைக் கொண்டுள்ளது. வங்கியானது அனைத்துத் தரப்பு மக்களிடமும் டிஜிட்டல் வங்கிச் சேவையை கொண்டு சேர்த்தல் எனும் அதன் இலக்கிற்கு இணங்க கையடக்கத் தொலைபேசியை இயக்கக்கூடிய எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுவானதும் பாதுகாப்பானதுமான டிஜிட்டல் வங்கிச் சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

BOC SmartPay செயலியின் பொருட்டு வழங்கப்பட்ட பிரபலமான டிஜிற்றல் கட்டணச் செயலிக்கான (வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் - கைப்பேசி கட்டணச் செயலி) தங்க விருது, அனைவருக்குமான நிதிச் சேவை - வகை A என்ற பிரிவின்கீழான ஆண்டின் சிறந்த வங்கிக்கான தங்க விருது, லங்காபே இணைய வழிக் கொடுப்பனவுத் தளத்தில் ஆகச்சிறந்த கையகப்படுத்துநர் என்ற தங்க விருது, வங்கிகளுக்கிடையிலான டிஜிற்றல் கொடுப்பனவுகளில் (வங்கி நிறுவனங்கள்) அனைத்து விடயங்களிலும் சிறந்து விளங்குவதற்கான வெள்ளி விருது, சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கி என்ற வெள்ளி விருது, B App செயலியின் பொருட்டு மிகவும் பிரபலமான டிஜிற்றல் கட்டணச் செயலி (வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் இணைய வங்கி) என்ற மெரிட் விருது, ஆண்டின் சிறந்த பொதுவான ATM செயற்படுத்துநர் என்ற வகையின் கீழான மெரிட் விருது என ரெக்னோவேஷன் விருதுகள் விழாவில் வங்கி வாரிக் குவித்த விருதுகள் இதற்குச் சான்றாகும்.

இவை யாவற்றுக்கும் மேலாக, ஐக்கிய இராச்சியத்தின் 'த பாங்கர்' சஞ்சிகை 2023ஆம் ஆண்டில் உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் ஒரு வங்கியாக மீண்டும் ஒருமுறை இலங்கை வங்கியைத் தெரிவுசெய்துள்ளது. இவ்வுயரிய தரப்படுத்தலின் பொருட்டு இலங்கையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரேயொரு வங்கியாக இலங்கை வங்கி விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகை ஆட்டிப்படைத்த கொவிட் தொற்றுநோய்ப் பரவலின் பின்னரான சமூக பொருளாதார நெருக்கடிக் காலத்தில் மக்களுடன் துணைநின்று ஆற்றிய சேவைக்காக

'SLIM Kantar மக்கள் விருதுகள் 2023' நிகழ்வில் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டும் 'சிறந்த வங்கிச் சேவை வழங்குநர்' அங்கீகாரத்தைப் பெற்றது இலங்கை வங்கி. அந்த வகையில் கடன் தவணைத் தள்ளுபடிகள், மறுசீரமைப்பு வசதிகள், வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுவதற்கான செலவு குறைந்த முறைமைகளும் மாதிரிகளும், நாணயமாற்று விகிதம் மற்றும் பணவீக்கத்தில் ஏற்படும் தளம்பல்களுக்கு எதிராக பாதுகாத்துக் கொள்வதற்கான அல்லது மறு முதலீடு செய்வதற்கான புதிய வாய்ப்புகள், அனைத்து வாடிக்கையாளர்களையும் சென்றடையும் டிஜிட்டல் மற்றும் பௌதீக வங்கித் தொழினுட்ப வசதிகள் போன்ற பல திட்டங்களின் மூலம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்சியை வழங்கியது. மேலும் இக்கால கட்டத்தில் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் ஏற்றுமதித் துறைக்கு புத்துயிரூட்டல் போன்ற பொருளாதார நெருக்கடியால் விளைந்த தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல சிறப்புப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## மரண அறிவித்தல்

### அருள்திரு.ஆ.வே.யேசுதாசன்

யாழ். உடுத்துறையை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்திரு.ஆ.வே.யேசுதாசன் அவர்கள் நேற்று (03.08.2023) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியதேவி யேசுதாசன் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தேவானந், கிறேஸ் ஜீவானன்ந்தினி (உடுவில் மகளிர் கல்லூரியின் உப அதிபர்), ஜொய்சித் பவானன்ந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி), Rev.கேரி தயானன்ந் (திருத்துவ சீர்திருத்த மூட்பராட்சி சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், டிலானி, அமலதாஸ் (முகாமையாளர் - சமுர்த்தி), உதயணன் (யாழ். மத்திய கல்லூரி), றதிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜொகான் ஜீவதாஸ் (மருத்துவபீடம் கொழும்பு பல்கலைக்கழகம்), சாம் டில்சாந், அபி ஜொய்சாந், பிளசினா, ப்றிளினா, ஜோனத்தான், ஜெமிமா, கெரேனா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (04.08.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் நடைபெற்று, பின்னர் மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை – இந்தியா இடையே கப்பல் சேவை மிக விரைவில்!

யாழ். இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு

வவுனியா , ஓக. 4

**இலங்கை யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் இந்தியா தமிழ்நாடு நாகபட்டினத்துக்கும் இடையிலான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமான் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்தார்.**

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆரம்பத்தில் காங்கேசன்துறை மற்றும் காரைக்கால் இடையே கப்பல் சேவை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த நிலையில் தற்போது காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே பயணப்பாதை மாற்றப்பட்டமையாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது.

கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்காக தமிழ்நாடு நாகபட்டினத்தில் பயணிகள் இறங்குமிடம், சுங்கம் என்பவற்றை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அவை நிறைவடைந்ததும் கப்பல் சேவையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (எ-இ)



# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 4

தெல்லிப்பழை பிரதேச செயலக இந்து கலாசாரப் பிரிவுடன் இணைந்து அகில இலங்கை சைவ மகாசபையின் அனுசரணையில் வலி. வடக்கு அறநெறி ஆசிரியர்களுக்கான செயலமர்வு கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை கீரிமலை குழந்தைவேல் சித்தர் சிவாலய சைவ அறப்பணி மையத்தில் இடம்பெற்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் பண்ணிசைப் பயிற்சியை திருமதி தேன்மொழி (சங்கீத ஆசிரியர்) வழங்கினார்.

அத்துடன் 'அறநெறிக்கல்வி ஆர்வம் தூண்டும் உத்திகள்', 'திருமந்திரம் வழியே சைவம் காட்டும் மானிடம்' என்ற விடயப்பொருளில் மருத்துவர் பரா.நந்தகுமாரால் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் அறநெறிக் கல்வியில் வாரம் ஒரு திருமந்திரம் (பாடல், பேச்சு, நாடகம், கதை, ஓவியம், செயன்முறை மூலம் விளக்கல்), அன்பே சிவம், ஒன்றே குலம், யாவர்க்குமாம் இறைவர்க்கு, யான் பெற்ற இன்பம் என்ற தலைப்புக்களில் ஆசிரியர்களால் கலந்துரையாடப்பட்டது.

பின்னர் இசை நயத்துடன் நாயன்மார் கதைகளை அளிக்கை செய்தனர்.

(ய-125)

# மோதலில் சகோதரர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 4

சகோதரர்கள் இருவரிடையே ஏற்பட்ட மோதலால் இருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கரம்பைக்குறிச்சி வரணிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மோதலில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-ரி3)



# சுற்றாடல் பேண் பணியில் கிளிநொச்சி மகா வித்தி.

கிளிநொச்சி, ஓக. 4

கிளிநொச்சி மகா வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் சுற்றாடல் சமூகப் பணி நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் சாரணியர் குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றாடல் பாதுகாப்புத் தொர்பில் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பிலான அறிவுசார் விருத்தியை வளர்க்கும் வகையிலும் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை முன்பாக விருந்து பாடசாலை வரையான சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் துப்புரவு செய்யப்பட்டதோடு, நீண்ட காலமாகக் அந்தப் பகுதியில் காணப்பட்ட உக்காத பொலித்தீன் பொருள்கள் என்பன அகற்றப்பட்டன. குறித்த பணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, கரைச்சிப் பிரதேசசபை, சுகாதாரத் துறையினர் எனப் பலரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். (ச-113)

# கைது!

யாழ்ப்பாணம், ஓக. 4

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிசாருக்குக் கிடைக்கபெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குறித்த இளைஞரை சோதனைக்குட்படுத்திய போது ஒன்றரை லீற்றர் கசிப்பு அவரிடமிருந்து மீட்கப்பட்டது. 26 வயதான இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். (ச-ரி2-125)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 4

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் கல்விமாணி (ஆரம்பக்கல்வி) கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# மதவெறியை விதைப்பது அழிவுக்கு வழிவகுக்கும்!

கூறுகிறார் மறவன்புலவு சச்சி

யாழ்ப்பாணம், ஓக. 4

தமிழர் வாழ்விடங்களை ஆக்கிரமித்து புத்தர் சிலைகளை நிறுவி மதவெறியை நஞ்சாக விதைக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் இலங்கையின் அழிவுக்கான வாயிலாகவே அமையும் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

படைத்தளபதி சரத் வீரசேகர, இறுதிப்போரில் படைத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகா உள்ளிட்ட இனவாதிகள் இலங்கை சிங்கள பௌத்த நாடு எனக் கொக்கரித்து வருகின்றனர்.

மைசூரைக் கைப்பற்றினோம். மதுரையைக் கைப்பற்றுவோம் என அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக் கபூர், தமிழகத்தில் இந்துக் கோயில்களை அழித்தான்.

அதேபோன்று அயோத்தியில் பல்லாயிரம் ஆண்டு தொன்மையான இராமர் கோயிலை 400 ஆண்டுகளுக்கு முன்பு இடித்த பாபர் அங்கே மசூதியைக் கட்டினான். பாபர் வழிவந்த அவுரங்கசீப் காசியில் அருள்மிகு விசுவநாதர் கோயிலை அழித்து அங்கே மசூதியைக் கட்டினான். அலாவுதீன் கில்ஜி, மாலிக் கபூர், பாபர், அவுரங்கசீப் போன்ற மதவெறியர்கள் போன்றே நஞ்சைக் கக்கி வருகிறார் சரத் வீரசேகர. 450 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் தென்கோடியில், பல்லாயிரம் ஆண்டு பழமையான, பல்லவர் திருப்பணி செய்த அருள்மிகு தென்னாவரநாயனார் கோயிலை கத்தோலிக்க மத வெறியோடு இடித்தவன் தளபதி தோமை சொயிசா. அங்கே உலூயிசா தேவாலயத்தைக் கட்டினான்.

405 ஆண்டுகளுக்கு முன் இந்து அரசின் சங்கிலி மன்னனைத் தோற்கடித்த கத்தோலிக்க படைத்தளபதி இடீ லீவரா யாழ்ப்பாணத்தில் 400 சைவக் கோயில்களை இடித்தான்.

தோமை சொயிசா, இடி லீவரா வழியில் போரில் வெற்றி பெற்ற மதக்களிப்பில், வெற்றியைக் கொண்டாடும் படைத்தளபதி சரத் வீரசேகர இலங்கை பௌத்த நாடு என்கிறார்.

போரின் வெற்றிக்குப் பின்னால் நிதானமும் பெருந்தன்மையும் மாவீரன் அலெக்சாண்டருக்கு இருந்தது. இலங்கையில் மாவீரன் எல்லாளனுக்கு இருந்தது.

ஆனால் மதவெறியைக் கக்கி புத்தர் சிலைகளை - விகாரைகளை தமிழர் பகுதிகளில் அமைப்பதை ஊக்குவிக்கும் நிதானமிழந்த இத்தகையவர்களின் செயற்பாடு இலங்கையின் அழிவுக்கு வழிவகுக்கும் - என்றுள்ளது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

இது தொடர்பில் அவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்ததாவது:-
உலக அளவில் இந்த ஆண்டுஎல்நினோ ஆண்டாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதன் தாக்கம் இலங்கையிலும் தீவிரமாக எதிரொலிக்கின்றது. வடக்கில் கடந்த ஒரு வாரத்துக்குள் அதிகூடிய அளவாக 36 பாகை செல்சியஸ் வெப்பநிலை அவதானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சராசரியான உணர் வெப்பநிலையாக 34 பாகை செல்சியஸ் காணப்படுகின்றது.
இந்தத் தொடர் உச்ச வெப்பநிலையால் வடக்கிலுள்ள காடுகளில் தீ விபத்துகள் ஏற்படலாம். சில வனப்பகுதிகளில் தற்போது தீ பரவுகை இடம்பெற்றுள்ளது. இதை விரைந்து கட்டுப்படுத்தாவிடின் நிலைமை மோசமாகும். அதேநேரம் பொதுவெளிகளில் தீயைக் கையாளும் போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.
வடக்கிலுள்ள நீர்நிலைகளில் தண்ணீரின் இருப்பிழப்பு இந்தக் காலங்களில் பலமடங்காக அதிகரித்துள்ளது. எனவே இதனால் நீர் நிலைகளில் மீன்களும் கடல்வாழ் உயிரினங்களும் அளவுக்கதிகமான இறந்து ஒதுங்கும் நிலைமை ஏற்படும்.
இந்தப் பேரிடர் நிலைமைக்கு 'தற்காலிகத் தீர்வாக' வடக்கு மாகாணத்தில் அடுத்த மூன்று நாள்களுக்குள் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளது. இதேவேளை - எதிர்வரும் 8ஆம் திகதிக்குள் ஒரு வெப்பச்சலன மழைக்கும் சாத்தியம் காணப்படுகின்றது. இந்த மழை பொய்க்கும் பட்சத்தில் அதன் ஆபத்தங்கள் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் அமையும்.
எனவே, குழந்தைகள் மற்றும் முதியவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் உயரிய அக்கறையுடன் இக்காலப் பகுதியில் செயற்படவேண்டும் என்பதுடன், தண்ணீரை பொதுமக்கள் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் - என்றார்.
(அ-ம-125)

## கட்டுப்பட்டது...

கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் மூலம் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் குடியிருப்புகளும் காப்பாற்றப்பட்டுள்ளன.
கடந்த மூன்று தினங்களாக குறித்த காட்டில் தீப் பரவல் ஏற்பட்டிருந்தது. இதனால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காட்டுப் பகுதி தீயினாலும் புகையினாலும் மூடுண்டது. தற்போதைய வெப்பப் பேரிடர் காரணமான தீப்பரவல் கட்டுப்படுத்த முடியாத நிலையினை எட்டியிருந்தது. இந்த பேரிடர் நிலையைக் கட்டுப்படுத்த வனவளத்திணைக்களமோ, படைத்தரப்பினரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் காட்டுத் தீ இன்னும் பரவும் அபாயம் ஏற்பட்டது. அத்தோடு ஆயிரக்கணக்கான வீடுகளும் தீயில் எரியும் நிலை உருவானது.
இந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து கரைச்சி பிரதேசசபையின் தீயணைப்புப் பிரிவினர் களத்தில் இறங்கினர். இதனிடையே பூநகரி பிரதேச செயலர் தனது உத்தியோகத்தர்கள் சகிதமும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரது ஆலோசனையின் பேரில் வருகை தந்தும் தீயணைப்புப் பணிகளை ஒருங்கிணைத்தனர். பலத்த போராட்டத்தின் மத்தியில் தீப்பரவல் நேற்றிரவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
காடும் காடு சார்ந்த கிராமமுமான முக்கொம்பன் 65வீட்டுக்குடியிருப்புத் திட்டம் மற்றும் அதனோடிணைந்த கிராமங்கள் தீப்பரவல் காரணமாக முற்றாக புகை சூழ்ந்திருந்தபோதும் மாலையின் பின்னர் இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது.
இதனிடையே எஞ்சிய காட்டுப் பகுதிகள் தீப்பரவல் ஏற்படாமல் தடுக்க நேற்றிரவு முதல் வனவளத்திணைக்களம் களமிறங்கியுள்ளதாக மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. பூநகரி பிரதேசசபை, கரைச்சி பிரதேசசபை தீயணைப்பு பிரிவுடன் இணைந்து காட்டுத் தீயினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தமையை மக்கள் பாராட்டியுள்ளனர்.
(அ)

## சிமெந்துத்...

பொதுமக்கள் பலர் இணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் கிராமங்களைச் சேர்ந்த மக்களும், பொது அமைப்பினரும் ஒன்றிணைந்து நேற்று இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.
இந்தத் தொழிற்சாலைக்கான இட அமைவு தொடர்பாகவும், அங்குள்ள முருகைக் கற்களின் தன்மை தொடர்பிலும் தற்போது பரிசீலனைகள் இடம்பெற்றுவரும் நிலையில், இந்தக் கள ஆய்வுகள் இடம்பெறும் பகுதிக்கு முன்பாக ஒன்றிணைந்தே பொதுமக்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.
சிமெந்துத் தொழிற்சாலையால் இந்தப் பகுதி மக்கள் சுவாசம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்படப் போகின்றது. அத்துடன், எமது பகுதியில் உள்ள நீர்நிலைகள் மீண்டெழ முடியாத உவர்த்தன்மை மிக்கதாக மாறவும் இந்தத் தொழிற்சாலை வழியேற்படுத்திவிடும். ஆதலால், இந்தப் பகுதியில் சிமெந்துத் தொழிற்சாலையை அமைக்கக்கூடாது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.
(அ-ம,113,214)

## மல்லாவிக்...

நேற்று களப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் மீன்களின் உயிரிழப்புக்கான காரணம் என்னவென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.
தற்போது கடுமையான வெப்பம் நிலவுகின்ற நிலையில், குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. இது மீன்களின் இறப்புக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.
(அ-ம-214,19,113)

## வாகன...

அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து ஓட்டோவொன்றை கொள்வனவு செய்துள்ளார். அந்த ஓட்டோவின் பதிவுப் புத்தகத்தை மாற்றுவதற்காக யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்குச் சென்றுள்ளார். அங்கு வாகனத்தின் தகவல்கள் மற்றும் இதர ஆவணங்கள் தொடர்பில்மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறையிட்டுள்ளனர்.
விசாரணையில் வாகனத்தின் புத்தகம் போலியானது என்பது தெரியவந்தது. அத்துடன், மோட்டார் சைக்கிளின் இயந்திரக் குறியீடுகளை ஓட்டோவுக்கு மோசடியாகப் பாவித்துள்ளமை கண்டறியப்பட்டது. இதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணையில், வாகனத்தை விற்பனை செய்த கிளிநொச்சி நபர் கைதுசெய்யப்பட்டார். இவர் ஓர் இடைத்தரகர் என்று தெரியவருகின்றது. அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் மருதங்கேணியைச் சேர்ந்த பிறிதொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
(அ-ம-26)

## சூத்திரதாரி...

பயனின்றி அவருடைய கணவனும் உயிரிழந்தசம்பவத்தில், கூலிப்படையை ஏவிய சூத்திரதாரி கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா, தோணிக்கல்லில் கடந்த 23ஆம்திகதி வீடு ஒன்றுக்குள் நுழைந்த குழுவொன்று வீட்டு உரிமையாளர் மீது வாளால் வெட்டித் தாக்கியதுடன், வீட்டையும் தீயிட்டு எரித்தது. இதில் இளம் குடும்பப் பெண் மூச்சுத் திணறல் காரணமாக சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவருடைய கணவன் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். தாக்குதலில் மேலும் 9 பேரும் காயமடைந்திருந்தனர். இந்த வழக்கில் ஐவர் கைதுசெய்யப்பட்டு 11ஆம் திகதிவரை மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் ஆறாவது நபராக பிரதான சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை 24 மணிநேரம் தடுத்துவைத்து விசாரணை நடத்துவதற்கு சி.ஐ.டி.யினர் நீதிமன்றில் அனுமதி கோரினர். இதற்கமைய அவரை 24 மணிநேரம் தடுத்துவைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது.
(அ-ம-110,18)

## கிளாலியில்...

கரையில், நேற்றுமுன்தினம் பின்னிரவு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள்மீது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.
காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
(அ-ம-20)

## பல்கலை...

மாணவியான அமிர்தநாயகம் மரியலக்சிகா (வயது-22) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இந்த மாணவி மன்னார், முருங்கனைச் சேர்ந்தவர். இவரது இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் மேற்கொண்டார். புலன் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(அ-ம-27,26)

## எரிவாயு...

இன்று வெளியிடப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.
உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் ஏற்படும் மாற்றத்துக்கு அமைய இலங்கையில் விலைச் சூத்திரம் மாற்றப்படும். இந்த நிலையில் உலக சந்தையில் ஒரு மெற்றிக்தொன் எரிவாயுவின் விலை 85 டொலரால் அதிகரித்துள்ளமையடுத்து இலங்கையில் எரிவாயுவின் விலை இன்று மாற்றம் செய்யப்படவுள்ளது. எரிவாயு விலைஅதிகரிப்புச் செய்யப்படவே வாய்ப்புகள் அதிகம் என்று கருதப்படுகின்றது.
(அ-ம)

## மீற்றர்...

பொருத்தாத ஓட்டோக்களை அப்புறப்படுத்த யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தாமையால், அதிகளவு கட்டணம் அறவிடப்படுகின்றது என்று அண்மைக்காலமாகப் பலரும் விசனம் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்களின் விளைவாக, யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயமாக்கப்பட்டது. மீற்றர் இல்லாத ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடவும் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் மீற்றர் பொருத்தாத ஓட்டோக்களை சேவையிலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை நேற்றுமுதல் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
(அ-ம-26,20)

## மடுவுக்கு...

சிங்க கலந்துகொள்ளவுள்ள நிலையில், கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இலங்கையில் உள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க யாத்திரிகர் தலங்களில் ஒன்றான மடுத் திருத்தலத்தின் பெருவிழா நாளைமறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி அங்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இம்முறை மடுப்பெருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இதனால் அங்கு இம்முறை பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.
மடுத்திருத்தலத்திலுள்ள ஆறு வாயில்களிலும் இம்முறை படையினர் கடும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். ஆதலால், திருவிழாத் திருப்பலியன்று ஆலயத்துக்கு வருபவர்கள் நேரகாலத்துடன் வருகைதருவதன் மூலம் திருப்பலியில் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் விக்கினேஸ்வரன் நினைவேந்தலும் பேருரையும்

யாழ்ப்பாணம், ஓக. 4

அமரர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரனின் நினைவேந்தலும் நினைவுப் பேருரையும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் 'ஊடகப் பெருவெளியில் செயற்கை நுண்ணறிவு' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (ச)



## மின் சாதனங்கள் திருத்தகத்தில் தீ!

### பல லட்சம் பெறுமதியான பொருள்கள் தீக்கிரை

கோண்டாவில் உப்புமடச் சந்தியில் உள்ள மின்சார உபகரண பொருள்கள் திருத்தகமொன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த அசம்பாவிதம் நேற்று வியாழக்கிழமை நண்பகல் நடந்துள்ளது.

தீ விபத்தில் சுமார் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26-125)


### தவறவிடப்பட்டுள்ளது

மருதனார்மடச் சந்தியிலிருந்து உடுவில் சந்தி வரையான பயணிக்கும் வீதியில் தங்க ஆபரணம் ஒன்று (கைச்செயின்) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**072 300 1937, 074 3827 552**


## கடலட்டைகளை உயிருடன் கடத்திய இருவர் கைது!



மன்னார், ஓக. 4

மன்னாரிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி கடலட்டைகளை உயிருடன் கடத்திய இருவர் நேற்று வியாழக்கிழமை மன்னார் பாலத்தடி சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குஞ்சு கடலட்டைகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர்கள் பல்லவராயன்கட்டுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட கடலட்டைகளுடன் சந்தேகநபர்கள் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி3-56)


## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து **1 km** தூரத்தில்.
* குடியிருப்பு சூழ உள்ள காணி
* நன்னீர் ஊற்று
* 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

**தொடர்புகளுக்கு: 076 057 0354**
**076 826 0354**

(CS 25774) A-1

## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் **கல்வியங்காடு 21** பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
* புதிய செம்மணி வீதி.
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.

**தொடர்புகளுக்கு:**
**076 788 0591**

(CS 25774B) A-1



## மரண அறிவித்தல்

பிறப்பு • 25 • 04 • 1933



இறப்பு • 01 • 08 • 2023

### திருமதி தியாகராசா பஞ்சவர்ணம்

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொடிகாமத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா பஞ்சவர்ணம் கடந்த (01.08.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முத்துப்பிள்ளை அப்புக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தியாகராசாவின் அன்பு மனைவியும், வர்ணராஜா, வர்ணமோகன் (Swiss), வர்ணகாந்தன் (Canada), வர்ணச்சந்திரன் (Swiss), காலஞ்சென்ற வர்ணநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, குங்குமம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோகரஞ்சி மற்றும் தங்கமலர், கலைவாணி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலோஜா, டிவசங்கர், ராகுல், கஜன், விஷ்ணு, வர்ணஜா, வர்நந்தி, றிஷிகேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2023) வெள்ளிக்கிழமை கச்சாய் வீதி, கொடிகாமம் இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவிதாழ்வு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

தகவல்:
**தி. வர்ணராஜா**
**(மகன் - 077 337 8033)**

(cs40349) (N.1)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில்
**16 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- ✔ நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- ✔ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ✔ நன்னீர் ஊற்று சூழல்
- ✔ ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- ✔ **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு - ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org